

# 5. மரியாவின் பாதை

## முன்னுரை

மே மாதம் என்றாலே குழந்தைகளுக்குக் குதூகலம். ஏனென்றால், இது விடுமுறைக்காலம். மரியாவின் பிள்ளைகளாகிய நமக்கு மே மாதம் என்றாலே கொண்டாட்டம். ஏனென்றால் இது மரியாவின் வணக்க மாதம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடும்பம் சிறப்பித்த பாரம்பரியமெல்லாம் மறைந்து போயிருந்தாலும், மரியாவின் மீது நாம் கொண்டுள்ள பற்றும், பாசமும், பக்தியும், வணக்கமும் மறைவதேயில்லை. பல்வேறு வினாக்களும், விவாதங்களும், குதர்க்கங்களும், விமர்சனங்களும் ஒரு சிலரால் தொடுக்கப்பட்டாலும் தாயாம் திருஅவை இறுக்கமாய் பற்றிக் கொண்டுள்ள ஒரு பாரம்பரியம் மரியாவின் மீதுள்ள பக்தியும், வணக்கமும். அதற்குக் காரணம் மரியா நம்மை இயேசுவிடமே கூட்டிச் சேர்க்கிறார் என்கிற உத்தரவாதம்தான். எனவேதான் 'மரியா வழியாக இயேசுவிடம்' என்பது திரு அவையின் தாரக மந்திரமாக உள்ளது. திருவிவிலியத்தில்கூட அன்னை மரியா பேசிய கடைசி வார்த்தைகள்: "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவா. 2:5) என்பது தான். சொன்னதோடு நில்லாமல், மரியா தம்முடைய வாழ்வில் இறைவன் சொன்னதையே செய்தும் காட்டினார். மரியா மட்டுமே இயேசுவின் வாழ்க்கைப் பாதையிலும், சிலுவைப்பாதையிலும் முழுமையாகப் பங்கேற்றவர் என்பதால் அவரோடு இந்தப் பயணத்தை மேற்கொண்டு, பாடுகளின் பாதை கற்றுத்தரும் பாடங்களைப் பயில்வோம்.

◆

### ✦ முதல் நிலை

"உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1:38)

## கீழ்ப்படியக் கற்றுக் கொள்வோம்

பொதுவாகவே கீழ்ப்படிவது என்பது ஒரு சிரமமான காரியம். எதற்காகக் கீழ்ப்படிகிறோம், யாருக்குக் கீழ்ப்படிகிறோம்

என்கிறத் தெளிவு இருந்தால் மட்டுமே கீழ்ப்படிதல் என்பது சற்று எளிதானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். ஆனால் இயேசுவும், மரியாவும்,கீழ்ப்படிந்த சூழல்கள் மிகமிகச் சவாலானவை.

தம்மைத் தீர்ப்பிடுகிறவன் குறையுள்ளவன் என்பது தெரிந்தும், தமக்குத் தரப்படுகிற தண்டனை பிழையானது என்பதைப் புரிந்தும் இயேசு கீழ்ப்படிந்தார். அதற்கு ஒரே காரணம், அதற்கு முந்தைய இரவில் அவர் தம் தந்தைக்கு கொடுத்திருந்த வாக்குறுதி: "ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்." (மத். 26:39)

மரியாவுக்கு ஏற்பட்டதோ வித்தியாசமான ஒரு போராட்டம். உலக அறிவின்படி சாத்தியமேயில்லாத ஒன்று அவர்முன் சவாலாக படைக்கப்படுகிறது. "இது எப்படி நிகழும்?" (லூக். 1:34) என்கிற நியாயமான கேள்வியை எழுப்புகிறார். "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக். 1:37) என்கிற சமாதான வார்த்தைகளைத் தவிர, குழப்பத்தைத் தெளிவுபடுத்தும் வேறு எந்த விளக்கமும் தரப்படவில்லை. ஆனாலும் மரியா கீழ்ப்படிந்தார். "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1:38) எனப் பணிந்தார்.

இயேசுவும், மரியாவும், கீழ்ப்படிதலுக்கான காரணங்கள் தெளிவாக இல்லாதபோதும் கடவுளுக்குக் கீழ்ப்படிதல் தங்கள் கடமையெனக் கருதி கீழ்ப்படிந்தனர். அதற்கான சன்மானத்தை இறுதியில் அடைந்தனர். தந்தையாம் கடவுள், இயேசுவுக்கு எல்லாப் பெயருக்கும் மேலானப் பெயரை அருளி, தம் வலப்பக்கத்தில் அமரச் செய்தார். மரியாவையோ எல்லாத் தலைமுறையினரும் போற்றும் வண்ணம் விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டி அலங்கரித்தார். கீழ்ப்படியக் கற்றுக் கொள்வோம். அதற்கான சன்மானம் கடவுளிடமிருந்து நிச்சயம் ஒருநாள் நமக்குக் கிடைக்கும்.

## செபம்

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும், கடவுளுக்குக் கீழ்ப்படிகிற நற்குணத்தை எங்களுக்குத் தாரும்.

✦ <u>இரண்டாம் நிலை</u>

"இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!"

(லூக். 1:34)

# சுமந்திடத் துணிவோம்

**சு**மப்பது என்பதே வலி தருகிற ஒரு அனுபவம். நாம் சுமக்கிற சுமை நம்முடையது என்றால் கஷ்டப்பட்டாவது அதைச் சுமக்கத் துணிவோம். ஆனால் நாம் சுமக்க வேண்டியது தேவையற்ற ஒன்று என்றோ, அது நம்முடையது அல்ல என்றோ தோன்றினால் அதனைச் சுமக்க நம்முடைய மனம் ஒருபோதும் இடம் தராது. ஆனால் இயேசுவும், மரியாவும்,அவர்கள் சுமக்க நேரிட்டது பிறருக்காக.

யாதொரு குற்றமும் செய்யாத போதும், இயேசு பாரச்சிலுவையைச் சுமக்கக் காரணமாயிருந்தது தந்தையாம் கடவுள் உலகின் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பு. தம் தந்தையின் விருப்பமாகிய உலக மீட்பு, தாம் சிலுவை சுமந்தால் மட்டுமே சாத்தியம் என்பதை உணர்ந்து இயேசு சிலுவையை அரவணைத்துக் கொண்டார்.

அன்னை மரியாவுக்கோ வேறுவிதமான கலக்கம். சுமக்க முடியாதப் பெரும்பழியைத் தாம் சுமக்க நேரிடுமோ என அஞ்சினார். எனவேதான் தம்மிடம் வந்த தூதரிடம் கேட்டார் "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே" என்று (லூக். 1:34). ஆனால் தாம் சுமக்கப்போவது இறைமகன் என்று அறிவுறுத்தப்பட்டதும், தயக்கமின்றி அந்த சவால் நிறைந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

இயேசுவும், மரியாவும், தாங்கள் சுமக்கப்போவது சவாலான ஒன்று என்று தெரிந்தும் அதனைப் பிறருக்காக சுமக்கத் தயாராய் இருந்தனர். அதற்கான வெகுமதியை தந்தையாம் கடவுள் காலம் நிறைவுற்றபோது கொடுத்து மகிழ்ந்தார். அவமானத்தின் சின்னமாம் சிலுவையை

ஆராதனைக்குரிய ஒன்றாய் மாற்றினார். மரியாவையோ அன்னையெனவும், முப்பொழுதும் கன்னியெனவும் உலகமே வாழ்த்தச் செய்தார். நாமும் சுமந்திடத் துணிவோம். கடவுள் நம்மையும் நிச்சயம் மிகவே உயர்த்துவார்.

**செபம்**

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும், பிறருக்காகச் சுமக்கக்கூடிய பரந்த மனதை எங்களுக்குத் தாரும்.

◆

## ✦ மூன்றாம் நிலை

"மரியா 'நான் ஆண்டவரின் அடிமை...' என்றார்."
(லூக். 1:38)

# தாழ்ச்சியை அணிவோம்

தாழ்ந்து போவது என்பது யாருக்கும் பிடிக்காத ஒன்று. "ஏதோ ஒரு காரியம் ஆக வேண்டும் என்றால் தாழ்ந்து போகலாம். அவசியமே இல்லாமல் நாம் ஏன் இறங்கிச் செல்ல வேண்டும்?" என்று நினைப்பதும் செயல்படுவதும் தான் மனிதர்களின் இயற்கையான குணம். ஆனால் இயேசுவும், மரியாவும்,தங்கள் மேன்மையை அறிந்திருந்தும் இறங்கி வரவும் தாழ்ச்சியை அணிந்து கொள்ளவும் தயங்கவேயில்லை.

சர்வ வல்லவரான கடவுளின் மகன் சாமானிய மனிதனாய் மண்ணில் விழுவது என்பது அவமானகரமான ஒரு காரியம். ஆனால் அதற்கு அடிப்படையாய் இருந்ததே இயேசுவின் மனநிலைதான். பவுலடியார் கூறுவதுபோல் "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை... தம்மையே தாழ்த்திக் கொண்டார்." (பிலி. 2:6,8)

மரியாவிடமும் அதே மனநிலையை நம்மால் காண முடிகிறது. கடவுளின் தூதர் அவர் முன் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே, வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" (லூக். 1:28) என்று சொன்னதுமே மரியா மகிழ்ந்திருக்க வேண்டும். தன்னை ஒரு உயர்வானப் பிறவியாய் நினைத்திருக்க வேண்டும். ஆனால் இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கியதாக விவிலியம் கூறுகிறது. மேலும் அவர் "நான் ஆண்டவரின் அடிமை" (லூக். 1:38) எனத் தம்மைத் தாழ்த்தியதையும் பார்க்கின்றோம்.

இயேசுவும், மரியாவும், தங்கள் உன்னத நிலையை அறிந்திருந்தும் தங்களைத் தாழ்த்திக் கொண்டனர். அதன் விளைவை வரலாறு ஒரு விந்தையாகவே நம்முன் படைக்கிறது. இயேசுவுக்கு முன்பாக விண்ணவரும் மண்ணவரும் மண்டியிடச் செய்தார் பரமதந்தை. வல்லவராம் கடவுள் தமக்கு அரும்பெரும் செயல்கள் செய்ததாய் மரியா அக்களிக்கின்றார். நாமும் தாழ்ச்சியை அணிந்து கொள்வோம். நிச்சயம் நம்மை மேன்மையின் உடையால் கடவுள் உடுத்துவார்.

**செபம்**

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும், தாழ்ச்சியை அணிந்துகொள்ளக்கூடிய பணிவான உள்ளத்தை எங்களுக்குத் தாரும்.

◆

✦ **நான்காம் நிலை**

"அவருக்கு அஞ்சி நடப்போருக்குத்...தம் தோள் வலிமையை காட்டியுள்ளார்." (லூக். 1:50,51)

## விதியென நினையோம்

துயரத்தை எதிர்கொள்வதே கடினமான காரியம். அதிலும் நாம் அதிகம் நேசிப்பவர்களுக்குத் துயரம் நேரிட்டால் அதனை ஏற்றுக் கொள்வதும், எதிர்கொள்வதும் மிக மிகக் கடினம்.

தாங்க முடியாத அந்தத் துயரை அனுபவிக்க நேரிடும்போது அதனைத் தலைவிதி என நொந்து கொள்வது மனித இயல்பு. இயேசுவும், மரியாவும்,இதற்கு ஒரு விதிவிலக்காய்த் திகழ்ந்தார்கள்.

எந்தக் காட்சியை தம் தாய் பார்த்துவிடக் கூடாது என்று இயேசு நினைத்திருப்பாரோ, அந்தக் காட்சி அரங்கேறுகிறது. எந்தக் கோலத்தில் தன் மகனை எந்தத் தாயும் பார்க்கத் துணிய மாட்டாளோ, அந்தக் கோலத்தில் மரியா இயேசுவைப் பார்க்க நேரிடுகிறது. இத்தகு சூழலில் இயற்கையாய் வெளிப்படும் உணர்வு, சதி செய்தவர்களுக்கு எதிராகக் கோபம் கொண்டு பழிவாங்கத் துடிப்பது. அல்லது விதியை நொந்து விரக்தியடைவது.

எப்போது ஒன்றைத் தலைவிதி என மனம் ஏற்றுக் கொள்கிறதோ, அப்போதே அதனை எதிர்க்கின்ற சக்தியையும், வெல்லுகிற உத்வேகத்தையும் மனம் இழந்து விடுகிறது. அதனால்தான் மனிதருள் பலர் கண்ணீர்க் கடலிலேயே தத்தளிக்கின்றனரே தவிர கரை சேர முயலுவதில்லை. வெகு சிலரே கண்ணீரைக் கூட வியர்வையால் வென்றெடுக்கும் சூட்சமத்தைத் தெரிந்து வைத்துள்ளனர்.

இயேசுவும், மரியாவும், அந்த உத்தியை நன்றாகவே பயின்றிருந்தனர். இயேசுவும் மரியாவும் தங்களுக்கு நேரிட்டதை சதியாகக் கருதி கொதிக்கவும் இல்லை; விதியென நினைத்து வாழாதிருக்கவும் இல்லை. மதி தெளிந்தவர்களாய் வலுவோடு எதிர்கொண்டு வரலாற்றில் இடம் பெற்றனர். "அவருக்கு அஞ்சுவோருக்குத் தம் தோள் வலிமையை" (லூக். 1:50,51) ஆண்டவர் காட்டுவார் என நம்பினர். அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. எந்தத் துயரச் சூழலையும் விதியென நினையாது வீரத்தோடு போராடு; வெற்றி நிச்சயம். நீ கடவுளின் கையில்; விதியின் கையில் அல்ல.

**செபம்**

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும், வேதனையுற நேரிட்டாலும் விதியென நினையாது வீரத்தோடு போராடும் அருளினைத் தாரும்.

◆

## ✦ ஐந்தாம் நிலை

“மரியா புறப்பட்டு யூதேய மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்.” (லூக். 1:39)

# உதவிட விரைவோம்

உதவுதல் என்பது உயரிய பண்பு. பிறர் கேட்காமலே உதவுதல் என்பது அதனினும் சிறந்தது. ஆனால் வாய்ப்புகள் கிடைத்தாலும் நம்மில் பலருக்கு உதவிட மனம்தான் வருவதில்லை. உதவக்கூடாது என்று நம்மில் யாரும் நினைப்பதில்லை. ஆனால் ‘உதவி செய்’ என்கிற குரல் நம்மில் ஒலிக்கும் அதே நேரத்தில் “நமக்கே உதவி தேவைப்படுகிறது; இதில் நமக்கெதற்கு தேவையற்ற கரிசனை?” என்கிற குரல் அதைவிட பலமாக ஒலித்துவிடுகிறது. அத்தகைய எண்ணம் துளிர் விடுகிற பிறரன்பை முளையிலேயே பட்டுப்போகச் செய்கிறது. ஆனால் இயேசுவும், மரியாவும், உதவுவதற்கு வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டனர்.

இந்தத் தலத்தில் கூட சீரேன் ஊரானாகிய சீமோன் இயேசுவுக்கு உதவியதாக நாம் சொல்லுகிறோம். உண்மைதான். ஆனால் இயேசு சுமந்த சிலுவை யாருடையது? சீமோனையும் உள்ளடக்கிய அனைத்து மனிதர்களின் பாவச் சிலுவை அன்றோ அது! அப்படிப் பார்க்கையில் சீமோன் இயேசுவுக்கு செய்த உதவியைவிட இயேசு சீமோனுக்கு செய்த உதவிதான் பெரிது.

அன்னை மரியாவும் இயேசுவைப் போன்றே உதவிட நினைத்தவர்; உதவிட விரைந்தவர். தாம் கருவுற்றிருந்த

அந்த வேளையிலும்கூட, முதிர் வயதில் கருவுற்றிருந்த தம் உறவினராகிய எலிசபெத்துக்கு உதவிட "மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்." (லூக். 1:39)

"நமக்கே உதவி தேவை, இதிலென்ன நாம் பிறருக்கு உதவுவது?" என்கிற சாக்குப் போக்குச் சொல்லும் நமக்கு இயேசுவும் மரியாவும், தங்கள் செயலால் கற்பிக்கும் பாடம் - உதவிட விரைந்திடுங்கள். "கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள்." (லூக். 6:38)

### செபம்

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும், உதவிட விரைகின்ற தாராள உள்ளத்தை எங்களுக்குத் தாரும்.

◆

### ✦ ஆறாம் நிலை

"அவர்... என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்" (லூக். 1:54)

## பரிவுள்ளம் கொள்வோம்

பரிவு கொள்ளுதல் என்பது மனிதருக்கு மட்டுமே முடிகிற காரியம். ஆனால் பிரியம் கொண்டவர்கள் மீது வேண்டுமானால் பரிவு காட்ட முடியுமே தவிர பரிட்சயம் இல்லாதவர்கள் மீது பரிவு காட்ட பலரால் முடிவதில்லை. இன்றையச் சூழலில் பரிவு காட்டக்கூட சற்று பயமாகத்தான் உள்ளது. பரிவுக்கு உரியவர்கள்போல பாசாங்கு செய்துவிட்டு நம்மிடம் உள்ளதையெல்லாம் பறிக்க நினைத்து ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதனையே காரணமாய்க்

காட்டி, நம்மில் பலர் இரக்கமே அற்றவர்களாக மாறி விடுகிறோம். ஆனால் இயேசுவும், மரியாவும், பிறருக்குப் பரிவு காட்டத் தயங்கியதேயில்லை.

இரத்தம் கசிந்த முகத்துடனும், குருதி சிந்தும் சிரசுடனும், இயேசு தடுமாறிச் சென்றபோது வெரோனிக்கா என்கிற பரிவுள்ள பெண் அவரை நெருங்கி, தம் துகிலால் அவரது திருமுகத்தைத் துடைக்கிறாள். நிச்சயமாய் இயேசு ஆறுதல் அடைந்திருப்பார். ஆனால் அதையும் தாண்டி அவளிடம் இயேசு பார்த்தது தனது பிரதிபலிப்பை. பெருந்திரளான மக்கள் மீது பரிவு கொண்டு உணவைப் பலுகச் செய்தவர் அல்லவா அவர். அதே பரிவுள்ளம் வெரோனிக்காவில் பிரதிபலிப்பதைக் கண்ட இயேசு, அதனை உலகறியச் செய்ய ஆசைப்பட்டார். எனவேதான் வெரோனிக்காவின் துகிலில் தம் திருமுகச் சாயலைப் பதித்தார்.

வெரோனிக்காவைக் காட்டிலும் இயேசுவின் பரிவான உள்ளத்தை பிரதிபலித்தவர் மரியா. இன்னும் சொல்லப் போனால் இயேசுவின் பரிவினை உலகிற்கு அடையாளம் காட்டியவரே மரியாதான். கானாவூர் திருமணத்தில் “திராட்சை ரசம் தீர்ந்து விட்டது” (யோவா. 2:3) என்பதை கவனித்த மரியா பரிவுள்ளம் கொண்டவராய் இயேசுவிடம் முறையிட, அப்போது அரங்கேறியதுதான் இயேசுவின் முதல் புதுமை. இயேசுவும், மரியாவும், பரிவு காட்டுவதில் நமக்கெல்லாம் சிறந்த முன்னுதாரணங்கள் ஆவர். அவர்களைப்போல் இரக்கம் காட்ட முயல்வோம். ஏனெனில் ஆண்டவர் நம்மை “என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்.” (லூக். 1:54)

## செபம்

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும் பரிவுள்ளம் கொள்ளுகிற கனிந்த உள்ளத்தை எங்களுக்குத் தாரும்.

◆

✦ ஏழாம் நிலை

"தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்."

(லூக். 1:52)

# விழுந்தவரைத் தூக்கி விடுவோம்

விழுபவர்களைப் பார்க்க நேரிடும்போது மனது இளகினால் அது மனித குணம்; மனது இறுகினால் அது மூர்க்க குணம். பல வேளைகளில் நம் மனம் இளகுவதும், இறுகுவதும் விழுந்தவர் யார் என்பதைப் பொறுத்தே அமைகிறது. நமக்கு வேண்டியவர்கள் விழுந்துவிட்டால் பதைபதைப்போடு உதவ விரைகின்றன நம் கைகளும் கால்களும். நமக்கு வேண்டாதவர்களோ, நம்மை வெறுப்பவர்களோ விழ நேரிட்டால், கை கொட்டிச் சிரிக்கவும், மனதார மகிழவும் தோன்றுகிறது. ஆனால் இயேசுவும், மரியாவும், விழுந்தவர்கள் யாரானாலும் அவர்களைத் தூக்கிவிடவே துடித்தனர்.

இரண்டாம் முறை விழுந்த இயேசுவை வீரர்கள் தூக்கி விட்டனரா அல்லது மேலும் துன்புறுத்தினரா என்பது வரலாற்றுக்கு மட்டுமே தெரியும். ஆனால் விழுந்தவர்களை எழுப்பி விடுவதையே தனது வாழ்வாக இயேசு கொண்டிருந்தார் என்பதை விவிலியம் விரிவாகவே எடுத்துரைக்கிறது. விபச்சாரத்தில் விழுந்த பெண்ணைக்கூட "நானும் தீர்ப்பிடேன். நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" (யோவா. 8:11) என எழுப்பி அனுப்பியதை திருவிவிலியம் பதிவு செய்கிறது. வரி தண்டுவோருக்குத் தலைவராய் இருந்து அனைவராலும் வெறுக்கப்பட்ட சக்கேயுவை நோக்கி, "இவரும் ஆபிரகாமின் மகனே! இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" (லூக். 19:9,10) எனக்கூறி தூக்கி நிறுத்துவதைப் பார்க்கிறோம்.

மரியாவிடமும் அதே பண்பு இருந்ததற்கான சான்று அவர் இயேசுவின் விண்ணேற்புக்குப் பின் நடந்த விதத்தில் நமக்குத் தெரிய வருகிறது. கோழைத்தனத்தால் தன் மகனைத் தனியே

விட்டு விட்டு ஓடிய திருத்தூதர்கள், பயத்திலும், கலக்கத்திலும் விழுந்திருந்ததை அறிந்த மரியா அவர்களோடு தங்கியிருந்து செபிப்பதை திருத்தூதர் பணிகள் நூலில் படிக்கிறோம். ஐயத்திலிருந்து அவர்களைத் தூக்கி விட்டவர் மரியா. இயேசு வாழ்ந்த போதும்கூட மரியா யாரையும் தண்டிக்க இயேசுவின் உதவியை நாடியதில்லை. விழுந்தவர்களைத் தூக்கி விடுவதே இயேசுவின் பண்பாகவும் மரியாவின் பண்பாகவும் இருந்தது. நாமும் அப்படியே வாழப் பழகுவோம். அப்போது “தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிற” (லூக். 1:52) கடவுளின் பிள்ளைகளாய் நாமும் விளங்குவோம்.

### செபம்

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும் விழுந்தவரைத் தூக்கிவிடும் இளகிய உள்ளத்தை எங்களுக்குத் தாரும்.

◆

## ✦ எட்டாம் நிலை

“சிலுவை அருகில் இயேசுவின் தாயும்.. நின்று கொண்டிருந்தனர்.” (யோவா. 19:25)

## அழுகைக்கு அர்த்தம் கொடுப்போம்

அழுவதைக் கோழைத்தனம் எனச் சொல்லுகிற இவ்வுலகம் அழவேத் தெரியாதவர்களை கல்நெஞ்சக்காரர்கள் எனவும் சொல்லத் தயங்குவதில்லை. ஆக, அழுகைக்கென்று ஒரு வரையறுக்கப்பட்ட இலக்கணம் இல்லை. எதற்காக அழுகிறோம், யாருக்காக அழுகிறோம் என்பதைப் பொறுத்தே நமது அழுகை அர்த்தம் பெறும். இயேசுவும், மரியாவும், ஒருபோதும் கோழைகளாய் அழுததில்லை.

நற்செய்தி முழுவதும் தேடிப்பார்த்தால் இயேசு இரண்டே இரண்டுமுறை அழுததாகப் பார்க்கிறோம். தம் நண்பர்

இலாசரின் மரணம், வரவிருக்கும் எருசலேமின் அழிவு, ஆகிய இரண்டு நிகழ்வுகள்தான் இயேசுவின் கண்களில் கண்ணீரை வரவழைத்தன. கெத்சமெனிப் பூங்காவிலே அவர் இரத்த வியர்வை வியர்த்த போதும், சொல்லொண்ணா வேதனைகளை அவர் சிலுவையிலே அனுபவித்த போதும் அழுததாகத் தெரியவில்லை. இதிலிருந்து நமக்குத் தெரிய வருவது இயேசு பிறருக்காக அழுதாரே தவிர தமக்காக அழுததே இல்லை. எனவேதான் இந்தத் தலத்திலும் அவர் தெளிவாகவே சொல்கிறார் ‘‘எனக்காக அழவேண்டாம்’’ என்று (லூக். 23:28)

வியாகுலத்தாய் என நாம் மரியாவை அழைக்கலாம். ஆனால் அவர் அழுததாக விவிலியத்தில் எந்தப் பதிவும் இல்லை. இயேசுவின் சிலுவை அருகில் அவரது தாய் மரியா இருந்ததற்கானப் பதிவு விவிலியத்தில் இருக்கிறதே தவிர அவள் உடைந்து போய் அழுததற்கான பதிவு இல்லவே இல்லை. ஆனால் அதே அன்னை இப்போது அழுவதாக பல செய்திகள் உள்ளன. உலகின் பல்வேறு இடங்களில் அவரது திருவுருவச் சிலைகளில் கண்ணீர் வடிவதாக, பல்வேறு சமயங்களில் சொல்லக் கேட்டிருக்கிறோம். அப்படியெனில் அவர் அழுவது மக்களை நினைத்தும், அவர்களது பாவ நிலை குறித்தும், அவர்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய அழிவு குறித்துமே ஆகும். ஆக அன்னை மரியாவின் கண்ணீரும் தனக்கானது அல்ல, பிறருக்கானதே.

இயேசுவும், மரியாவும், பிறருக்காக அழுதனரே தவிர, தங்களுக்காக அல்ல. அழுவாரோடு அழுவதிலும், அவர்கள் அழுகை நீங்க உழைப்பதிலும் தான் அர்த்தம் உள்ளது.

## செபம்

இயேசுவே! உம்மைப் போலவும் அன்னை மரியாவைப் போலவும் பிறருக்காக அழவும், பிறர் அழுகை நீங்க முயற்சி செய்யவும் எங்களுக்கு அருள் தாரும்.

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்"
(யோவா. 2:5)

# நம்பிக்கை இழக்காதிருப்போம்

தோல்விக்கு மேல் தோல்வி வந்தால் துவண்டு போவது இயற்கை தானே! எத்துணை பலசாலியாகவும், மனத்திடம் உள்ளவராகவும் ஒருவர் இருந்தால்கூட அடுத்தடுத்தத் தோல்விகளும், தடுமாற்றங்களும் நம்பிக்கை இழக்கத்தான் செய்யும். யார் ஒருவர் எப்போதும் நம்பிக்கை இழக்காமல், விழுகின்ற போதெல்லாம் வீறுகொண்டு எழுகின்றாரோ அவரே வெற்றியாளர் ஆகின்றார். இயேசுவும், மரியாவும், நம்பிக்கையில் தளர்ச்சியுறவுமில்லை; முயற்சியில் தொய்வு காட்டவும் இல்லை.

மூன்றாம் முறை விழுந்த இயேசு "இனிமேல் முடியாது" என முடங்கிப்போகவில்லை. விழுந்த அவர் விழுந்தே கிடக்கவும் இல்லை. தனது சக்தியனைத்தையும் பயன்படுத்தி எழுந்து நடந்து, தந்தை தமக்கிட்டிருந்த பணியை நிறைவேற்றி முடித்தார்.

மரியாவிடமும் இதே பண்பினை நம்மால் பார்க்க முடிகிறது. தமது மகனிடம் கானாவூர் பிரச்சனையை கொண்டு சென்றபோது முதலில் கிடைத்த பதில் நம்பிக்கைத் தருவதாக இல்லை. ஆனால் மரியாவோ தளர்ந்து போகவில்லை; நம்பிக்கையோடு சொன்னார்: "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்று (யோவா: 2:5). அந்த சொற்றொடரில் மரியாவின் திடமான நம்பிக்கையும், விடாமுயற்சியும் தெளிவாகத் தெரிகின்றன. அதே நம்பிக்கையின் தொனியில் தான் அவர் தமது புரட்சிப்பாடலையும் பாடியுள்ளார். அடிமைப்பட்ட யூதச் சமுதாயத்தைச் சார்ந்த மரியா, அதுவும் ஒரு பெண் "செருக்குற்றோரை சிதறடிப்பார்; வலியோரை

தூக்கி எறிவார், செல்வரை வெறுங்கையராய் அனுப்புவார்'' எனச் சொல்லத்துணிந்தார் என்றால் அது அவர் ஆண்டவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையை மட்டுமல்ல, மனித வரலாற்றின் மீதும் கொண்ட நம்பிக்கையைக் காட்டுகிறது. நாமும் நம்பிக்கை இழக்காதிருக்க உறுதி ஏற்போம்.

**செபம்**

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியா போலவும் நம்பிக்கை இழக்காதிருக்கவும், விடாமுயற்சியோடு வாழவும் எங்களுக்குக் கற்றுத்தாரும்.

◆

## ✦ பத்தாம் நிலை

''பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர்.'' (லூக். 2:7)

# அகத்தினைப் பார்ப்போம்

''ஆள் பாதி; ஆடை பாதி'' என்பது பழமொழி. இதனையே ஆதாரமாகக் கொண்டு, மற்றவர்களது வெளித்தோற்றத்தை வைத்தே அவர்களை எடைபோட்டு விடுகிறோம். அதற்கேற்றவாறே அவர்களோடு நாம் கொள்ளுகிற நட்பும் உறவும் அமைந்து விடுகிறது. ஆனால் இயேசுவும், மரியாவும், ஒருவரின் வெளித்தோற்றத்தைக் காட்டிலும், அவர்களது அகத்தின் அழகிற்கே முக்கியத்துவம் கொடுத்தனர்.

அகத்தின் அழகினை கவனிக்க இயேசு தவறவில்லை என்பதால்தான் விதவைப் பெண்ணின் காணிக்கை இயேசுவுக்கு விலைமதிப்பு மிக்கதாய்ப்பட்டது. ஏழை இலாசரை ஆபிரகாமின் மடியில் வைத்து அழகு பார்க்கத் தோன்றிற்று இயேசுவுக்கு. ஆனால் அந்த அற்புதர் இயேசுவை நிர்வாணமாக்கி நகைத்தது அன்றைய சமூகமும் அதிகார வர்க்கமும்.

ஆடையின்றி இருந்த தம் மகனைப் பார்த்த மரியா துடிதுடித்துப் போயிருப்பார். பாரம்பரியம் கூறுவதுபோல, மேலிருந்து கீழ்வரை தையலில்லா மேலாடையை இயேசுவுக்கு ஆக்கிக் கொடுத்தவர் மரியாவெனில், அவரது துயருக்கு எல்லையே இருந்திருக்காது. ஆனாலும் மரியா இந்தத் தலத்தின் அவமானத்தை அமைதியாக எதிர்கொண்டார். தனது மகனின் புறத்தோற்றத்தைத் தாண்டி அவரது அகத்தின் ஆளுமையை மரியா உணர்ந்திருப்பார். இந்த மகனை பச்சிளம் பிள்ளையாகப் பெற்றெடுத்த போதும் அவருக்கு இப்படியொரு அனுபவம் தானே கிடைத்தது.

“உம்மிடம பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்” (லூக். 1:35) என எந்தக் குழந்தையைப் பற்றிச் சொல்லப்பட்டதோ, அந்தக் குழந்தையை அவர் பெற்றெடுத்தது நம்பமுடியாத ஒரு நிலையில் - ஒரு மாட்டுக் குடிலில். “விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர்.” (லூக். 2:7) துணிகளில் பொதியப்பட்ட அந்தக் குழந்தையைப் பார்த்தபோது அவரால் எப்படி நம்பமுடியவில்லையோ, அப்படியே தான் ஆடையின்றி இருந்த இயேசுவை இந்தத் தலத்தில் காண முடியவில்லை. ஆனாலும் ஏற்றுக்கொண்டார். வெளித்தோற்றங்களைக் கண்டு வெட்கப்பட்டவர் அல்லர் மரியாவும், இயேசுவும். நாமும் அவ்வாறே இருக்க வேண்டும் என ஆசிக்கின்றனர். அகத்தினைப் பார்க்கப் பழகுவோம்; ஆண்டவர் முன் அழகாகக் காட்சியளிப்போம்.

## செபம்

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும் புறத்தோற்றத்தை புறந்தள்ளிவிட்டு அகத்தோற்றத்தை கண்டுணரும் அருளினை எங்களுக்குத் தாரும்.

◆

"ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்து முடித்த பின்பு... நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்." (லூக். 2:39)

# திருச்சட்டம் காப்போம்

'அடங்கிப் போவது' என்பது மனிதருக்கு ஒவ்வாத காரியம். அதிலும் அடக்கப்படுகிறோம் என்று தெரிந்தால் முறுக்கிக்கொண்டு திமிருவதே பலரது சுபாவம். தனிமனிதனாய் யாராவது இதனைச் செய்தால் அந்த நபரை "அடங்காப்பிடாரி" என அழைப்போம். ஆனால் அதனையே பலர் திரண்டு செய்தால், உரிமைக்கான போராட்டம் என்றும் எழுச்சிமிகு போராட்டம் எனவும் மார்தட்டிக் கொள்வோம். நிச்சயம் இவையெல்லாம் அவசியமானவை தான். கடவுளால் சுதந்திரமாய்ப் படைக்கப்பட்டிருக்கிற நாம் யாருக்கும் அடிமைப்பட்டு வாழ அவசியமில்லைதான். ஆனால் அதன் நீட்சியாகக் கடவுளுக்கும், கடவுள் வகுத்துள்ள திருச்சட்டத்துக்கும் பணிய மாட்டோம் என்பது தவறல்லவா? இயேசுவும், மரியாவும், யாருக்கும் அடங்கிப்போன கோழைகள் அல்ல என்பதற்கு அவர்களது விவிலியப் பிரகடனங்களே சாட்சி. ஆனால் அவர்கள் இறைச்சட்டத்திற்கும், இறைத்திட்டத்திற்கும் பணிந்தே வாழ்ந்தனர்.

கூரிய ஆணிகளால் சிலுவையில் அறையப்பட்ட போது இயேசுவால் தன்னை விடுவித்துக் கொண்டிருக்க முடியாதா? நிச்சயம் முடிந்திருக்கும். ஆனால், அவர் சிலுவையிலே தம்மை அடக்கிக் கொண்டதற்குக் காரணம் இயலாமை அல்ல; இறைத்திட்டம் நிறைவேற வேண்டும் என்கின்ற தீர்மானம். இறைமகனைப் பெற்றெடுத்த மரியாவுக்கு தூய்மைப்படுத்தும் சடங்கு என்ற ஒன்றே அவசியமில்லையென்றாலும் மரியா, கோவிலில் தம்மையே சுத்திகரிப்புக்காக ஒப்புவித்தார். தமது தலைமகன் இயேசுவையும் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார் எனத் திருவிவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. "ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்து

முடித்த பின்பு... நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். (லூக். 2:39)

இயேசுவும், மரியாவும், இறைமகன் என்பதாலும், இறைவனின் அன்னை என்பதாலும், சடங்குகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் கட்டுப்பட்டு இருந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் அவர்கள் திருச்சட்டத்தைக் காப்பவர்களாகவே இருந்தனர். நாமும் அவ்வாறே இருக்க வேண்டும் என்பது அவர்களது விருப்பம். பிறரால் அடக்கப்படுவது அடிமைத்தனம்; தாமே அடங்கிப்போவது அடக்கமுடைமை. அடக்கம் அமரருள் உய்க்கும்.

**செபம்**

இயேசுவே உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும் திருச்சட்டத்தைப் பேணிக் காத்து, இறைத் திட்டத்துக்கு ஏற்ற வாழ்வு நடத்திட எங்களுக்கு அருள் தாரும்.

◆

## ✦ பன்னிரண்டாம் நிலை

“மகனே, ஏன் இப்படிச் செய்தாய்?’ (லூக். 2:48)

# விரக்தியை விரட்டுவோம்

முடிந்தவரை போராடுவதும், முடியாதபோது இடிந்து போவதும் மனித இயல்பு. “சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும்” எனச் சொல்லி தம்மையே தேற்றிக் கொள்கிறவர்கள் ஒரு ரகம் என்றால், விரக்தியின் உச்சத்தில் தற்கொலை போன்ற தவறான முடிவுகளுக்குச் செல்கிறவர்கள் இன்னொரு ரகம். “வாழ்க்கை என்பது மலர்ப்பாதையல்ல; முட்கள் நிறைந்ததுதான் வாழ்க்கைப் பாதை” என்கிற விளக்கங்கள் எல்லாம் நமக்கென்று வந்தால் வாயடைத்துப் போய்விடும். எல்லோர் மீதும் கோபம் வரும். கடவுள் மீது கூட கோபமும் “நம்மை கைவிட்டு விட்டாரே” என்கிற உணர்வும் சிலருக்கு வரும்.

இயேசுவின் வாழ்விலும், மரியாவின் வாழ்விலும் அத்தகைய தருணங்கள் வராமல் இல்லை. அவர்கள் குழம்பாமலும், குமுறாமலும் இல்லை. கேள்வி கேட்கத் தயங்காமலும் இல்லை. சிலுவையில் தொங்குகிறபோது இயேசு எழுப்பிய "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத். 27:46) என்பது திருப்பாடல் 22இல் முன்னுரைக்கப்பட்டவை நிறைவேறுவதை உணர்ந்துதான் என்றாலும், அதிலும் ஒரு வேதனை கலந்த விரக்தி வெளிப்படாமல் இல்லை.

அதே போலத்தான், மூன்று நாட்கள் தேடலுக்குப் பின் இயேசுவைக் கண்டடைந்த மரியா "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்?" (லூக். 2:48) எனக் கேட்டது உரிமையோடு என்று நாம் எடுத்துக்கொண்டாலும், அதில் ஒரு சலனமும், சங்கடமும் கலந்தே இருந்தது. இயேசுவுக்கும், மரியாவுக்கும் ஏற்புடைய பதில்கள் வந்ததாகத் தெரியவில்லை. தன் மகனின் காட்டமான பதிலை பெரிதுபடுத்தாமல் மரியா நகர்ந்து சென்றதாகத் தெரிகிறது. இயேசுவோ, தம் தந்தையின் அமைதியையே பதிலாக ஏற்றுக்கொண்டு, எந்தத் தந்தையை நோக்கிக் கதறினாரோ, அதே தந்தையிடம் தம் ஆவியை ஒப்படைத்து உயிர் துறக்கிறார். விரக்தியை வென்ற வீரத் திருமகனாய் உயர்ந்து நிற்கின்றார்.

இயேசுவைப் போலவும், மரியாவைப் போலவும் விரக்தியான சூழல்கள் வரும்போது வினாக்கள் எழுப்புவோம் தவறில்லை; கடவுளை நோக்கிக்கூட கூக்குரலிடுவோம் தவறில்லை; ஆனால், அதற்குப் பிறகு, விரக்தியை வென்று வீறுநடை மேற்கொள்வோம். மரணம் வரும்வரை, நாம் சாகாமலும் சோராமலும் போரிடுவோம். இறுதி வெற்றி நமதே.

### செபம்

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும், விரக்தியை வென்று வீரத்தோடு வாழ்வைத் தொடர்ந்திட துணிவான இதயத்தை எங்களுக்குத் தாரும்.

◆

✦ பதிமூன்றாம் நிலை

"மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்." (லூக். 2:19)

# உள்ளத்தில் இருத்துவோம்

புரியாத புதிராய் பல விஷயங்கள் இந்தப் புவிதனில் நிகழ்கின்றன; ஏன்? நம் வாழ்விலும் கூடத்தான். "எனக்கு ஏன் இப்படி நிகழ வேண்டும்? என்னைவிட மோசமானவர்கள் எல்லாம் நலமாகவும், வளமாகவும் இருக்கும்போது நான் மட்டும் ஏன் இப்படித் துயருற வேண்டும்?" என நம்மில் பலர் நொந்து போகிறோம். அப்போது நம் இதயத்தில் வெடிப்பது இவை போன்ற கேள்விகளே: "கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அந்தக் கடவுளுக்கு கண்கள் இருக்கின்றனவா?" இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்க பாவிகளாகிய நமக்கு எந்தத் தகுதியும் இல்லையென்றாலும் தயக்கமின்றிக் கேட்போம். ஆனால் இயேசுவும், மரியாவும்,எல்லாத் தகுதியும் இருந்தும் இத்தகைய கேள்விகளைக் கேட்டதாகத் தெரியவில்லை.

கேட்கவில்லை என்பதால் இத்தகைய கேள்விகள் அவர்களுக்குள் எழவேயில்லை என்று அர்த்தம் இல்லை. 'கூடுமானால் இக்கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும்' என இயேசு செபித்தார் என்றால் அதன் பொருள் என்ன? தமக்கு நேரப்போகிறத் துன்பத்தை தந்தை ஏன் அனுமதிக்கிறார் என்கிற கேள்வி இயேசுவின் மனதில் இருந்ததுதான்.

சிலுவைப் பாதையின் இந்தத் தலத்தில் மரியாவுக்கும் இத்தகைய கேள்விகள் நிச்சயமாய் எழுந்திருக்கும். இத்தகைய கொடூர மரணத்தை அனுமதித்தவர் கடவுள் தானா? செத்துக் கிடக்கும் இந்த மகன் உண்மையில் இறைமகன் தானா? என்கிற கேள்விகள் எல்லாம் உறுதியாய் தோன்றியிருக்கும். ஆனால் இயேசுவும், மரியாவும், தந்தைக் கடவுளின் அமைதியில் கூட அவர் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டார்கள்; அமைந்த உள்ளத்தோடு அனைத்தையும் ஏற்றுக் கொண்டார்கள்.

“உள்ளத்தில் இருத்தி சிந்திப்பது” (லூக். 2:19) என்பது மரியா கற்றுத் தேர்ந்திருந்த வித்தை. அதனால்தான் வேதனையில்கூட இயற்கையான வினாக்களுக்கு இறைமையான பதில்களை அவரால் பெற முடிந்தது. நாமும்கூட அமைந்த உள்ளத்தோடு அனைத்தையும் ஏற்றுக்கொள்ளப் பழகுவோம். “அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி” (பிலி. 4:7) நம் இதயத்தில் தங்கி ஆட்சி செய்யும்.

**செபம்**

இயேசுவே! உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும் அமைந்த உள்ளத்தோடு அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் தகைமையை எங்களுக்குத் தாரும்.

◆

## ✦ பதினான்காம் நிலை

“இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்.” (லூக். 1:48)

# வாழ்வை வரலாறாக்குவோம்

**வா**ய்த்த வாழ்வை ஏற்றுக்கொள்வது என்பதே மனிதராகிய நமக்கு முடியாத காரியமாய் உள்ளது. இதில் கிடைத்த வாழ்க்கையைக் கொண்டாடுவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாதது. நம்மைவிட வசதியானவர்களை பார்த்ததுமே நமக்குள் எழுகிற இயல்பான உணர்வு “பொறந்தா அவன மாதிரி பொறக்கணும்” என்பதுதான். இத்தகைய ஏக்கங்கள், சில நேரங்களில் பொறாமையாக வெடிக்கும். பல நேரங்களில் “விதி விட்ட வழி” என நம்மை ஒடுக்கும். ஆனால் வரலாற்றின் பக்கங்களில் நிறைந்திருக்கும் மாமனிதர்களில் பலபேர் தரித்திரத்திலிருந்து சரித்திரத்திற்கும், சோதனையிலிருந்து சாதனைக்கும், படுகுழியிலிருந்து சிகரத்திற்கும் உயர்ந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

இயேசுவும், மரியாவும், தங்களுக்கு வாய்த்த வாழ்க்கையில் வசதிகள் இல்லையென்றாலும், வசந்தங்கள் இல்லையென்றாலும், இருந்ததைக் கொண்டு தங்கள் வாழ்வைக் கொண்டாடினார்கள். தம் பாடுகள் குறித்து தம் சீடர்களிடம் பேசியபின் இறை வேண்டல் செய்த இயேசு கூறியது இதுதான்: “நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன். தந்தையே, உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும்” (யோவா. 17:4,5) தந்தையின் மாட்சியில் தனக்கு பங்கு உண்டு என்பதை இயேசு உறுதியாய் நம்பியதால்தான் மிகக் கொடிய இறப்பினை அடைந்திருந்தாலும், அடுத்தவர் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டாலும், அகிலம் உள்ளவரை அவர் மகிமையின் மன்னராகவே அறியப்படுவார்.

மரியாவும் தம் ஏழ்மை குறித்தோ, தமக்கு விடுக்கப்பட்ட சவால் நிறைந்த அழைப்பு குறித்தோ சற்றும் கலக்க முற்றதாகத் தெரியவில்லை. “இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுடையாள் என்பர்.” (லூக். 1:48) என்று அவர் பாடிய பாடலுக்கும் அவரது வாழ்வில் நடந்தேறிய நிகழ்வுகளுக்கும் சற்றும் சம்மந்தமே இல்லாமல்தான் இருந்தது. இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தபோது கவலையால் அவரது தொண்டை அடைத்திருக்கும். ஆனால் நம்பிக்கையால் அவரது நெஞ்சமும் நிறைந்திருந்தது. எனவேதான் உயிர்ப்பின் மாட்சியில் மரியா பங்கு கொண்டார். இன்றைக்கு அகிலமே அவரை அன்னையென்றும் அரசியென்றும் போற்றிக் கொண்டாடுகிறது. நாமும் வாய்த்த வாழ்வினை வரலாறாக்கவே அழைக்கப்பட்டுள்ளோம். முயன்று தான் பார்ப்போமே! முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்;

## செபம்

இயேசுவே, உம்மைப் போலவும், அன்னை மரியாவைப் போலவும் வாய்த்த வாழ்வுக்கு நன்றி கூறி அதனையே வரலாறாக மாற்ற எங்களுக்கு வல்லமையைத் தாரும்.

◆

## முடிவுரை

மரியாவுக்கு தரப்படுகிற ஒவ்வொரு மகிமையும், அவருக்கு சாற்றப்படும் ஒவ்வொரு புகழுரையும், அவரை அழைக்கப் பயன்படுத்தும் ஒவ்வொரு அடைமொழியும் இயேசுவை மையமாகக் கொண்டதுதான் என்பதையும், இயேசுவின் மாட்சியிலிருந்து வெளிப்படும் ஒளிக்கீற்றுதான் அவை என்பதையும் ஆழ்ந்து தியானிப்பவர் அனைவருமே ஏற்றுக் கொள்வார்கள். அப்படிப் பார்க்கையில் இயேசுவின் பாடுகளில் முழுமையாய்ப் பங்கெடுத்த மரியாவுக்கு அவரது மாட்சியிலும் பங்கு இல்லாமலா போயிருக்கும்? தமது பாடுகள் மற்றும் மரணத்திற்குப்பின் இயேசு தம் சொந்த வல்லமையால் மகிமையோடு உயிர்த்தார் என்பது நமது விசுவாசம்; ஆணித்தரமான நம்பிக்கை. இயேசுவுக்கு இணையாக மரியா உட்பட எந்த மானுடப் பிறவியும் இருக்க இயலாது என்பதால் மரியா தாமாகவே உயிர்த்தெழவில்லை. ஆனால் அவரது உடல் அழியாவண்ணம் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார்; என்பதுவும் நம் ஆழ்ந்த நம்பிக்கை. அதுவே நமக்கு ஊக்கமளிக்கும் உண்மையும்கூட. ஏனென்றால் தூய பவுலடியார் கூறுகிறார், “நாம் அவரோடு இறந்தால், அவரோடு வாழ்வோம்; அவரோடு நிலைத்திருந்தால், அவரோடு ஆட்சி செய்வோம்” (2. திமொ. 2: 11,12)

◆